**கவனிக்க.-** *2011.05.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1708 - 2011 මැයි මස 27 වැනි සිකුරාදා - 2011.05.27**

*1708 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 646 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 658 |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2011, யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, மே மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

உதவிப் பொலிஸ் பரிசோதகர் பதவி - விசேட அதிரடிப்படை

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் விசேட அதிரடிப்படை உதவிப் பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ''பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஹவ்லொக் வீதி, கொழும்பு 06'' என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2011.07.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,90,200 - 7 X 2,160 - 2 X 2,880- 8 X 3,840 - 17 X 4,500 - ரூபா 3,18,300.

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) விசேட கடினக் கொடுப்பனவுகள் :
- (1) வடக்கு/ கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 1,200 ;
- (2) மற்ற பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 600.

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :
- (1) வடக்கு/ கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 12,000 ;
- (2) மற்றைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 6,400.

(அ) இலவச பயண வசதி ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

(ஊ) விசேட அதிரடிப்படையின் பயிற்சியை முடித்து விசேட அதிரடிப்படையில் சேவையில் இருக்கும் காலம் வரை மட்டும் விசேட அதிரடிப்படைக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை :

* வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசித் திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள் :

- க. பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றுள்ளதுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- க. பொ. த. (உ. தர) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந் திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படும்.

**குறிப்பு 3**.- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்படமாட்டாது.

(இ) பௌதிகத் தகைமைகள் :

உயரம் : 5 அடி 6 அங். (ஆகக் குறைந்தது)
மார்பு : 32 அங். ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை :

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றைய

கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) பிற தகைமைகள் :

விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) மற்றைய தகைமைகளை உடைய ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கும் மற்றும் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்களுக்கும் (SA) இது ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்பத் தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிகாண் பரீட்சையில் பங்குபற்றலாம். அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

விண்ணப்பதாரர்-

(1) மீற்றர் 1500 - 6 நிமிடம் 20 வினாடிகளில் தொடர்ந்து ஓடி முடிக்க வேண்டும்.
(2) சிடப் (Situps) - 30 வினாடிகளில் 15 தரம்
(3) டிப்ஸ் (Dips) - 30 வினாடிகளில் 15 தரம்
(4) ஸ்கொட்ஸ் (Scott thrush) - 30 வினாடிகளில் 20 தரம்

- பௌதிகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**எழுத்துப் பரீட்சை :**

(i) எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :-

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்குக் குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல் ;
* பொது அறிவும் பொது நுட்பமும் (01 மணித்தியாலம்.)

6. **வைத்தியப் பரிசோதனை**.- ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் வைத்தியப் பரிசோதனைக்கு தோற்ற வேண்டும். பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரரின் நன்னடத்தையும் அவரின் கிட்டிய உறவினர்கள், நண்பர்களின் நன்னடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரச மொழி தேர்ச்சிக் கொள்கையை அமுல்படுத்தல்** :

- பொது நிர்வாக உள்ளூர் ஆட்சி அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007 என்ற இலக்கமும் 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு, மாகாண அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.
- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.
- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றம் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவப்பணம் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

(உ) பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்க பகுதி II - பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் 1952/2006 என்ற இலக்கமும் 2006.10.19 ஆந் திகதியும் 2007.08.09 (திருத்தப்பட்டது) ஆந் திகதியுடைய பொலிஸ்மா அதிபரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல்

கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக் காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகல் அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகூர்நிலை உதவிப் பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் மா அதிபரின் 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொலிஸ் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்ய வேண்டும்.

(ஏ) தகுதிகூர்நிலை உதவிப் பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்ய வேண்டும்.

(ஒ) தகுதிகூர்நிலை உதவிப் பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

- (அ) பிறப்புச் சான்றிதழ் ;
- (ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;
- (இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;
- (ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்குப் புறம்பாக பெற்ற சான்றிதழ்கள் ;
- (உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;
- (ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்த லாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்படமாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

உதவிப் பொலிஸ் பரிசோதகர் பதவி - விசேட அதிரடிப்படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

   (ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

   (இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
   (பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

   பிறந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையம் -
   மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

   (ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

   (இ) நிரந்தர முகவரி :-----.

   (ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

   (உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :-----.

   (ஊ) தொலைபேசி இலக்கம் (வசிப்பிடம்) :-----, கையடக்க தொலைபேசி இல. :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

   (ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருபவர்கள் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் சேவை செய்துள்ளீரா? ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ? :-----.

16. நீங்கள் தற்போது பொலிஸ் உப சேவையில் சேவை செய்கிறீர்களா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை போன்ற விபரங்களின் பிரதியை இணைக்குக :-----.

17. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும்.

18. (அ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படை தாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

21. **திணைக்கள தலைவரின் சான்றிதழ்** (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ................................ அவர்கள் இந்த திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையில் இருந்து விடுவிக்க முடியும் என தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்கள தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை இடப்பட வேண்டும்.

பதவி :-----.
திகதி :-----.

5-646/ 1

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப்படை

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2.* கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ''பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஹவ்லொக் வீதி, கொழும்பு 06'' என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2011.07.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

*3.* ***சம்பள அளவுத்திட்டம்.***- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160- 17 x 2,880 - ரூபா 2,54,100.

மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத் திட்டத்துக்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) விசேட கடினக் கொடுப்பனவுகள் :
- (1) வடக்கு/ கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 1,200 ;
- (2) மற்றைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 600.

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :
- (1) வடக்கு/ கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 10,500 ;
- (2) மற்றைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 5,600.

(அ) இலவச பயண வசதி ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலை களுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற் காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும் ;

(ஊ) விசேட அதிரடிப்படையின் பயிற்சியை முடித்து விசேட அதிரடிப் படையின் சேவையில் இருக்கும் காலம் வரை மட்டும் விசேட அதிரடிப்படைக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும் ;

***4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :***

(அ) *வயதெல்லை.*- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்பங்கள் பாரம் கொடுக்கும் கடைசித் திகதி அன்று 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) *கல்வித் தகைமைகள்.*- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தி யடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்க ளாக கருதப்படமாட்டாது.

(இ) பௌதிக தகைமைகள் :

உயரம் : 5 அடி 4 அங்குலம் (ஆகக் குறைந்தது)
மார்பு : 30 அங்குலம் ஆகக் குறைந்தது (மூச்சு விட்ட நிலையில்)

**குறிப்பு 1.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை :

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) *பிற தகைமைகள்.*- விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமான வர்களாகக் கருதப்படுவர்.) மற்றைய தகைமைகளை உடைய ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர் களுக்கும் இது ஏற்புடையதாகாது.

**5. ஆட்சேர்ப்பு முறை.-** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிகாண் பரீட்சையில் பங்குபற்றலாம் அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும் :-

மீற்றர் 1000 - 03 நிமிடங்கள் 44 விநாடிகள்.

பௌதிகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

***எழுத்து பரீட்சை :***

(i) எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :-

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல் ;
* பொது அறிவும் பொது நுட்பமும் (01 மணித்தியாலம்.)

**6. வைத்திய பரிசோதனை.-** ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் வைத்திய பரிசோதனைக்கு தோற்ற வேண்டும். பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

**7. பின்னணி விசாரணைகள்.-** (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் கிட்டிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

**8. அரச மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாக உண்ணாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 2007.04.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு, மாகாண அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.
- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.
- நியமன திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றம் நிறுத்தி வைக்கப்படும்.

**9. நியமனக் கொள்கைகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத் திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவப்பணம் செலுத்துதல் வேண்டும்.

**10. சேவை நிபந்தனைகள்.-** (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத் தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதி 41 ஆம் இலக்கம் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் 1952/2006 என்ற இலக்கமும் 2006.10.19 ஆந் திகதியும் 2007.08.09 (திருத்தப்பட்டது) ஆந் திகதியுடைய பொலிஸ்மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக் காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்ப மிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகல் அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை 1693/2003 இன் பிரகாரம் பொலிஸ் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள் (இருப்பின்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப் பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர் களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப்படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :-----.

(ஊ) தொலைபேசி இலக்கம் (வசிப்பிடம்) :-----, கையடக்க தொலைபேசி இல. :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழ் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருப வர்கள் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் சேவை செய்துள்ளீரா? ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக? :-----.

16. நீங்கள் தற்போது பொலிஸ் உப சேவையில் சேவை செய்கிறீர்களா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை போன்ற விபரங்களைக் குறிப்பிடுக. நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக :-----.

17. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்பவும் :-----.

18. (அ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படை தாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யான வையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

5-646/2

## இலங்கைப் பொலிஸ் திணைக்களம்

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப்படை

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தில் விசேட அதிரடிப்படை பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ''பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஹவ்லொக் வீதி, கொழும்பு 06'' என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப்பெயரினை குறிப்பிட்டு பதிவுத்தபாலில் 2011.07.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160- 17 x 2,880 - ரூபா 2,54,100.

மேற்குறிப்பிடப்பட்ட சம்பள அளவுத் திட்டத்துக்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதம் தோறும் வழங்கப்படும் :-

(அ) விசேட கடினக் கொடுப்பனவுகள் :
(1) வடக்கு/ கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 1,200 ;
(2) மற்றைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 600.

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

(1) வடக்கு/ கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 10,500 ;
(2) மற்றைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 5,600.

(அ) இலவச பயண வசதி ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையாக கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

(ஊ) விசேட அதிரடிப்படையின் பயிற்சியை முடித்து விசேட அதிரடிப்படையின் சேவையில் இருக்கும் காலம் வரை மட்டும் விசேட அதிரடிப்படைக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள்** :

(அ) வயதெல்லை.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியில் 18-25 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) *கல்வித் தகைமைகள்.-* க.பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம்/ தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.-** இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.-** க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தி யடைந்திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படும்.

**குறிப்பு 3.-** விருப்பத்துக்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்க ளாக கருதப்பட மாட்டாது.

(இ) *பௌதிகத் தகைமைகள் :*

*உயரம் : 5 அடி 2 அங். (ஆகக் குறைந்தது)*

**குறிப்பு 1.-** சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிக தகைமைகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின்படி தகைமை பெறுவர்.

(ஈ) *பார்வை தொடர்பான தேவை :*

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/ 6 ஆகவும் மற்ற கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக் கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) *பிற தகைமைகள்.-* விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமான வர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக் களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

**5. ஆட்சேர்ப்பு முறை.-** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தகைமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்பயிற்சிகளில் பங்கு பற்றலாம் அதாவது மனோவலிமை பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும் :-

*மீற்றர் 1000 - 05 நிமிடங்கள் 14 விநாடிகள்.*

பௌதிகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

***எழுத்து பரீட்சை :***

(i) எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :-

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல் ;
* பொது அறிவும் பொது நுட்பமும் (01 மணித்தியாலம்.)

**6. வைத்தியப் பரிசோதனை.-** ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் வைத்திய பரிசோதனைக்கு தோற்ற வேண்டும். பரிசோதனை யில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

**7. பின்னணி விசாரணைகள்.-** (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் கிட்டிய உறவினர்கள், நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவார்.

**8. அரச மொழி தேர்ச்சி கொள்கையை அமுல்படுத்தல் :**

- பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப் பட்ட 07/2007 என்ற இலக்கமும் 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு, மாகாண அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சி பெறல் வேண்டும்.
- 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.
- நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் குறித்த மொழியில் தேர்ச்சியடையும்வரை சம்பள ஏற்றம் நிறுத்தி வைக்கப்படும்.

*9.* **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத் திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவப்பணம் செலுத்துதல் வேண்டும்.

*10.* **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக் கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவர்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத் தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

(உ) பொலிஸ் மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதி 41 ஆம் இலக்கம் கொண்ட பகுதி II பொலிஸ் வர்த்தமானியின் பிரகாரமும் 1952/2006 என்ற இலக்கமும் 2006.10.19 ஆந் திகதியும் 2007.08.09 (திருத்தப்பட்டது) ஆந் திகதியுடைய பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடை வதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக் காகவும், சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களைச் செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகல் அங்கீகரிப்பது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுனர் பெண் பொலிஸ் கொஸ்தாபல், 1693/2003 ஆம் இலக்க பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கையின் பிரகாரம் பொலிஸ் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஏ) பயிலுனர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்தல் வேண்டும்.

(ஒ) பயிலுனர் பெண் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் திணைக் களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவ ராவர்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) இன் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது) ;

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்துக்கு புறம்பாக பெறப்பட்ட சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்);

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற சான்றிதழ்களும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11" x 8" அளவிலான தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை தமது சொந்த கையெழுத்தில் பூரணப்படுத்தி 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்த லாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொலிஸ் திணைக்களம்**

பெண் பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப்படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :-----.
(ஊ) தொலைபேசி இலக்கம் (வசிப்பிடம்) :-----, கையடக்க தொலைபேசி இல. :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின்தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

ஆண்டுகள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா? திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறமைகள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-----.

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் சேவை செய்துள்ளீரா? ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக? :-----.

16. நீங்கள் தற்போது பொலிஸ் உப சேவையில் சேவை செய்கிறீர்களா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை போன்ற விபரங்களைக் குறிப்பிடுக. நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக :-----.

17. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா ? :-----.
(அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்).

(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

18. (அ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படை தாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

5-646/3

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகம் பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி – குருணாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, ஆனி மாதம் 27 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, வைகாசி மாதம் 05.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | பன்னல | ஏலபடகம பகுதியில் கட்டுகம்பல ஹத்பத்துவ பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், குருநாகல். |

5-665

---

அறிவித்தல்

**சுற்றாடல் அமைச்சு**

வனத் திணைக்களம்

**வன விரிவாக்கல் அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்பு தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச்செய்தல் - 2011**

வனத் திணைக்களத்தில் விரிவாக்கல் அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக 2011.05.13 ஆந் திகதிய 1706 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று அறியத்தரப்படுகிறது.

எம். எம். பீ. ஹிடிசேகர.
வன பாதுகாவலர் நாயகம்.

வன திணைக்களம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.

5-733

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**போக்குவரத்து அமைச்சு**

மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

## இலங்கை தொழினுட்பவியல் சேவையின் II ஆம் வகுப்பின் 'ஆ' வகுதி மோட்டார் வாகனப் பரீட்சகர்களை மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011

இலங்கை தொழினுட்பவியல் சேவையில் II ஆம் வகுப்பின் 'ஆ' வகுதி மோட்டார் வாகனப் பரீட்சகர்களை மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2011, ஒற்றோபர் மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். பரீட்சை நடைபெறும் திகதி காலக்கிரமத்தில் செய்தித்தாள்கள் மூலம் அறிவிக்கப்படும். இப்பரீட்சை யைப் பிற்போடும் அல்லது இரத்துச்செய்யும் உரிமையினை மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கொண்டிருப்பார்.

நேர்முகப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சையின் சகல வினாத்தாள் களுக்கும் தோற்றி ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40 வீதம் குறைந்தபட்ச புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பகாரர்கள் மத்தியிலிருந்து மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் போதும் என குறித்துரைத்த உச்சமட்டத்தில் மொத்தப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டதுமான விண்ணப்பகாரர் தொடர்பில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் திகதி மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். (நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

1. நியமனம் பெறுபவர்களின் எண்ணிக்கை, நியமனம் செயல்வலுப் பெறும் திகதி என்பன மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

**2. கட்டமைப்பும் மாதாந்த சம்பள அளவுத்திட்டமும் :**

| | |
|---|---|
| விசேட வகுப்பு | : ரூ. 20,760 - 365x9 - 500 x 18- ரூ. 33,045 |
| I ஆம் வகுப்பு | : ரூ. 18,490 - 240 x 5 - 320 x 14- ரூ. 24,170 |
| II ஆம் வகுப்பு 'அ' வகுதி | : ரூ. 16,450-180x11-ரூ. 18,430 |
| III ஆம் வகுப்பு 'ஆ' வகுதி | : ரூ. 14,570-170x10-ரூ. 16,270 |

(ரூ. 14,910 சம்பள படிநிலையை எய்துவதற்கு முன், முதலாவது வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். II 'அ' ஆம் வகுப்புக்கு பதவியுயர்வு பெறும் பொருட்டு II 'ஆ' ஆம் வகுப்பில் 6 வருட சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்வதற்கு முன் முதலாவது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்).

இலங்கை தொழினுட்பவியல் சேவையின் II ஆம் வகுப்பின் 'ஆ' வகுதியிலுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்து பரீட்சகர் பதவி பொருட்டே இப்பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

3. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. விதவைகள்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

4. **தகவுத்திறன்**.- ஒவ்வொரு பரீட்சார்த்தியும்- (அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) சிறந்த குணநலமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று).

**5. விண்ணப்பகாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :**

(i) மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தொழினுட்பவியல், பொறிமுறை எந்திரவியல், தானாக வியங்கி தேசிய டிப்ளோமா

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் எந்திரவியல் விஞ்ஞானம், பொறிமுறை எந்திரவியல், தானாகவியங்கி தேசிய டிப்ளோமா

அல்லது

(iii) உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் எந்திரவியல், பொறிமுறை எந்திரவியல், தானாகவியங்கி தேசிய உயர் டிப்ளோமா

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழினுட்பவியல், பொறிமுறை எந்திரவியல், தானாக வியங்கி டிப்ளோமா

அல்லது

(v) இலங்கை எந்திரவியல் நிறுவகத்தினால் நடாத்தப்படும் எந்திரவியல் பரீட்சையின் பகுதி I, பொறிமுறை எந்திரவியல், தானாகவியங்கி டிப்ளோமா

அல்லது

(vi) மேலே குறிப்பிடப்பட்ட தொழினுட்பவியல் தகைமைகளுக்கு நிகரானது என இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படுவதுமான சான்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பிற தகைமை.

**6. தொழில்சார் அறிவும் அனுபவமும் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் மேலே குறிப்பிட்ட தொழினுட்பவியல் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பிற்பாடு, அரசாங்கத்தில் அல்லது அரச கூட்டுத்தாபன/ நியதிச்சட்ட சபையொன்றில் அல்லது கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்கள் குறைந்தபட்சம் 10 பேர்கள் பொருட்டு செலுத்தப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் கராஜ் (வாகன திருத்தும் இடம்) ஒன்றில் உரிய துறையில் குறைந்தபட்சம் இரு வருட மேற்பார்வை மட்டத்திலான அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

(ii) சகல மோட்டார் வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல்.

7. ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் பரீட்சை பொருட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமானதாகும்.

*8*. நியமனம் பெறுபவர்கள் நாட்டின் எப்பகுதியிலேனும் சேவை யாற்றுவதற்கு உடல் ரீதியாக தகுதி உடையவரா இல்லையா என்பது பற்றி பரிசோதிக்கும் முகமாக அரச வைத்திய அதிகாரி ஒருவரினால் நடாத்தப்படும் பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும்.

*9*. நியமனம் பெறும் சகல அலுவலர்கள் அரசாங்க சேவைக்குச் சேர்ந்த அரசகரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பிலான தேர்ச்சியினை சேவைக்கு சேர்ந்து 5 வருடங்களுக்குள் பெறுதல் வேண்டும்.

*10*. ***பரீட்சை நடைமுறை***.- ஆட்சேர்ப்புப் பரீட்சை இரு வினாத் தாள்களைக் கொண்டுள்ளது. அது தொடர்பிலான விபரங்கள் பின்வருமாறு :-

(i) மோட்டார் பொறிநுட்பம் தொடர்பிலான சாதாரண அறிவு - (நேரம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

(இவ்வினாத்தாள் பல்தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களை உள்ளடக்கியதாகும். விண்ணப்பக்காரர்கள் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.)

கீழே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப துறைகள் தொடர்பான அடிப்படை அறிவினையும் குறித்த துறைகளுக்கு ஏற்புடைய வாறான குறைபாடுகள் தொடர்பான அடிப்படை அறிவினை யும் விண்ணப்பகாரர்கள் பெற்றிருத்தல் வேண்டும் :-

(1) டீசல் மற்றும் பெற்றோல் எந்திரத்தின் செயற்பாடு மற்றும் வேக தள்ளுபடி நிலைமை (velocity rebate)

(2) கிளச்சு மற்றும் செலுத்துகை முறைமை

(3) உராய்வு நீக்கும் முறைமை மற்றும் குளிராக்கும் முறைமை

(4) மின் முறைமை

(5) பெற்றோல் மற்றும் டீசல் வாகனங்களின் எரிபொருள் முறைமைகள்

(6) கால் தடுப்பு முறைமை, தடுப்பின் வினைத்திறனைப் பரீட்சிக்கும் உபகரணங்களை பரிசோதித்தல், எதிர்த்தாக்கல் காலம், நிறுத்தும் தூரம்

(7) கைத்தடுப்பு முறைமை

(8) சில்லு வரிசையாக்கல் மற்றும் சுக்கான் பொறிநுட்பத் தைப் பரீட்சிக்கும் உபகரணங்கள்

(9) இடைநிறுத்தும் நிலை (suspension) முறைமை

(10) மோட்டார் வாகனமொன்றின் தர அறிக்கையைத் தயாரித்தல்

(11) மோட்டார் வாகனமொன்று பொருட்டு தகுதிச் சான்றிதழை வழங்குதல்

(12) திணைக்களத்தின் பணிகள் மற்றும் மோட்டார் வாகனப் பரீட்சகர் ஒருவருக்குரிய கடமைகள் தொடர்பிலான சாதாரண அறிவு

(13) வண்ணந்தீட்டுதல், காய்ச்சியொட்டுதல் மற்றும் பொருத்துதல் தொடர்பான அறிவு

(14) தன்னியக்க செலுத்துகை

(ii) நுண்ணறிவுப் பரீட்சை - (நேரம் : 1 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

(விண்ணப்பகாரர்களின் மொழிசார் மற்றும் எண்சார் திறன், பகுத்தறியும் ஆற்றல் போன்ற துறைகள் அடங்கலாக பரீட்சார்த்திகளின் நுண்ணறிவை மதிப்பிடும் முகமாக தயாரிக்கப்பட்ட பல்தேர்வு மற்றும் குறுகிய விடை மாதிரியான 50 வினாக்களைக் கொண்டிருக்கும். (விண்ணப்பகாரர்கள் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்).

***கவனிக்கவும்***.- (i) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்வறிவித்தலின் 05 (I-VI) வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளின் பிரகாரம் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றிய மொழியிலேயே அதாவது சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் தோற்றுதல் வேண்டும். இருப்பினும், தகைமை பெறும் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் அல்லது ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற பரீட்சார்த்தி ஒருவர் தான் விரும்பின் இப்பரீட்சையில் சிங்கள மொழி மூலம் விடையளிக்க முடியும். பரீட்சை பொருட்டு விண்ணப்பித்த மொழி ஊடகத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படாது என்பதனை கருத்திற்கொள்க.

(ii) பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள் மத்தியிலிருந்து மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அபேட்சகர்களுக்கு மாத்திரம் பரீட்சையில் தோற்றுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிராத அபேட்சகர்களின் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(iii)*விண்ணப்பிக்கும் முறை*.- (1) மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பகாரர்கள் தாங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் உரிய மாதிரிப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமான ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் ஒவ்வொரு பிரிவும் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர்களினால் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் என்பதுடன் தங்களுக்கு ஏற்புடையதற்ற பிரிவு ஏதுமிருப்பின் அதில் 'ஏற்புடையதன்று' எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் வெறும் கோடு இருப்பது அதனை நிராகரிப்ப தற்கு வழிவகுக்கும் என்பதனை உறுதியாக கருத்திற்கொள்ளவும். மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்காத விண்ணப்பப்படிவங்களும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். தாம் விண்ணப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தின் ஒளிப்படப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் சிறந்ததாகும். மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்துப்போகிறதா என்பது பற்றி விண்ணப்பகாரர்கள் விமர்சித்துப் பார்த்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு இல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதனையும் கவனத்திற்கொள்க. (மாதிரி விண்ணப்பப்படிவத்துடன்

1.0 முதல் 1.11 வரையிலான தலைப்புக்கள் 1 ஆம் பக்கத்திலும், 2 முதல் 3 வரையிலான தலைப்புக்கள் 2 ஆம் பக்கத்திலும், 4 முதல் 7 வரையிலான தலைப்புக்கள் 3 ஆம் பக்கத்திலும் இருக்குமாறு ஏ4 அளவிலான தாள்களின் இரு பக்கத்தையும் பயன்படுத்தி தயாரித்துக்கொள்ளவும்).

(2) விண்ணப்பங்கள் 2011.06.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் "மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம், இல. 341, எல்விட்டிகல மாவத்தை, நாராஹேன்பிட்டி, கொழும்பு 05" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அத்திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை வைத்து அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரை தெளிவாகக் குறிப்பிடவும்.

(3) மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இல. 2003-02-14 இற்கு வரவு வைக்கும்படியாக ஏதேனும் மாவட்ட/பிரதேச செயலகத்துக்கு பரீட்சைக் கட்டணமாக ரூ. 500 செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டவும். பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் சிறந்ததாகும். இப்பரீட்சைக் கட்டணம் எவ்வித காரணம் பொருட்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது. வேறு பரீட்சைக்கு மாற்றுவதற்கும் வசதியளிக்கப்பட மாட்டாது.

(4) அரசாங்க திணைக்களங்கள்/அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் ஏற்கனவே சேவையிலுள்ள அபேட்சகர்கள், தங்களது விண்ணப்பங்களைச் சேவையாற்றும் திணைக்களத்தின் அல்லது நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். 2011.06.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பும்படியான வேண்டுகோளுடன் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பகாரர்களிடமிருந்து கேட்டுக்கொள்ளப்படுகின்றது. மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் அல்லது குறித்த திணைக்களத்தின் வேறொரு அலுவலகரின் தனிப்பட்ட பெயருக்கு விண்ணப்பங்கள் அனுப்பக் கூடாது. திணைக்களத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களேனும் உரிய திகதிக்குப் பின் கிடைப்பின் நிராகரிக்கப்படும். ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களின் விண்ணப்பப்படிவங்களில் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் முகமாக திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும் இடவில்லையெனின் குறித்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(5) உறுதிப்படுத்துதல்.- ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரரது கையொப்பம் உரிய திணைக்களத் தலைவரால் அல்லது அவர் பொருட்டு அவ்வாறு கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவராலேயே உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பகாரர்களின் கையொப்பம் அதனை உறுதிப்படுத்துவதற்கு அதிகாரம்பெற்ற ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரச பாடசாலை அதிபர், தரைப்படை, கடற்படை அல்லது விமானப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற அலுவலர், அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 6/2006 இன்படி மாதாந்த திரட்டு சம்பளம் ரூ. 22,935 அல்லது அதற்கு மேல் மாதாந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரசாங்க அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பிக்கு, அல்லது தலைமைப் பிக்கு, வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் அல்லது மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

12. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பப் படிவங்களைத் தெரிந்தெடுத்து அவ்விண்ணப்பப்படிவங்களை பரீட்சைகள் ஆணையாளருக்கு அனுப்பியதன் பிற்பாடு அவரே குறித்த பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகளை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தங்களது கையொப்பங்களை உறுதிப்படுத்திக்கொண்டு அவ் அனுமதி அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை ஒன்றை சமர்ப்பிக்காத பரீட்சார்த்திக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

விண்ணப்பக்காரர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தை தவிர்ந்த வேறொரு பரீட்சை மண்டபத்திற்கு வருகை தரும் பரீட்சார்த்தி எவருக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் தினத்திலேயே தனது அனுமதி அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்தி கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிமுறைகள் இந்த வர்த்தமானியில் பகுதி I : தொகுதி (IIஅ) ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ்விதிமுறைகளை பின்பற்ற கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர். பரீட்சை நடாத்தப்படும் திகதி அடங்கிய பரீட்சை அறிவித்தல் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததெனினும் அனுமதி அட்டை கிடைக்கப்பெற வில்லையெனின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதத்தில் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை எனின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அதுபற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். நீங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தினதும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் ஒளிப்படப் பிரதிகளும், பதிவுத்தபால் பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியிலுள்ள பிரதேசம் எனின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தையும் அடங்கிய உங்களது வேண்டுகோள் கடிதத்துடன் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதே மிகவும் சிறந்ததாகும். பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். பரீட்சார்த்தி எவரேனும் இவ்விதிமுறைகளை மீறின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்படுவதற்கு அவருக்கு நேரிடும். பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதனை கருத்திற்கொள்ளலாகாது.

13. **அடையாள அட்டை**.- பரீட்சார்த்திகள் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடம் பொருட்டும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சை மண்டபத்தினுள் சுய ஆளடையாளத்தை நிரூபித்துக் காட்டுதல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) பரீட்சைத் திகதிக்கு 3 வருடங்களுக்கு மேற்படாத காலத்தினுள் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போட்) ;

மேற்குறிப்பிட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்ப தாரிகளினது பரீட்சார்த்தி நிலை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் பணிப்புரைக்கிணங்க இரத்துச்செய்யப்பட முடியும்.

*14. **தகைமைகள் தொடர்பிலான ஆவணங்கள்** :*

(i) பணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் தகைமைகளை நிரூபிப்பதற்கான சகல சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப் பட்ட பிரதிகள் என்பன விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் குறித்துரைக்கப் பட்டவாறு தேவையான சகல விபரங்களும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு தேவைப்படும் விடயங்களைக் கொண்டிராத விண்ணப்பம் ஏதுமிருப்பின் அது நிராகரிக்கப்படும்.

(ii) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைபெறும் பரீட்சார்த்திகள் ஆவணங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பித்து சுய தகவுத்திறனை நிரூபித்தல் வேண்டும்.

(iii) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகள் அவசியமாகும் :-

(அ) அதிகாரம்பெற்ற ஒருவரினால் வழங்கப்பட்ட குணநலச் சான்றிதழ்.- குறித்த சான்றிதழ், சமாதான நீதவான், சட்டத்தரணி, வசிக்கும் பிரிவின் பிரதேச செயலாளர் அல்லது அ. நி. சு. இல. 6/2006 இன்படி சம்பள அளவுத்திட்டத்தில் ஆரம்ப மாதாந்த சம்பள படிநிலை ரூ. 22,935 அல்லது அதற்கு மேல் மாதாந்த சம்பளததைப் பெறும் நிரந்தர அரசாங்க அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பிக்கு, அல்லது தலைமைப் பிக்கு, வேறு மத பீடங்களுக்குப் பொறுப் பாகவுள்ள மதகுருமார் அல்லது மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரிட மிருந்து பெற்றுக்கொள்ள முடியும். சான்றிதழ் வழங்குபவரின் பதவி, பெயர், முகவரி என்பன அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

அரச சேவையில் நிரந்தரப் பதவி ஒன்றை வகிக்கும் பரீட்சார்த்தி குணநல சான்றிதழைச் சமர்ப்பிக்க அவசியமில்லை.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புச் சான்றிதழின் சான்றுப் படுத்தப்பட்ட பிரதி அல்லது (பிறப்பு பதிவுசெய்யப் பட்டிராத பரீட்சார்த்தி தொடர்பில்) பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றிய விசேட சான்றிதழ்.

**கவனிக்கவும்**.- பாடசாலைப் பாவனை பொருட்டு அல்லது கல்வி நடவடிக்கை பொருட்டு வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்பை பதிவுசெய்யும் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்ட சான்றுப் படுத்தப்பட்ட பிரித்தெடுப்பு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக சத்தியக் கடதாசி அல்லது திருமுழுக்குச் சான்றிதழ் ஏற்றுக்கொள் ளப்பட மாட்டாது. பிறப்புச் சான்றிதழிலுள்ள பெயர்/ பெயர்கள் மற்றும் பரீட்சார்த்தி பொதுவாகப் பயன்படுத்தும் அத்துடன் அவர் பரீட்சையில் தோற்றிய பெயர்/பெயர்கள் என்பனவற்றுக்கிடையில் வேறுபாடு இருப்பின் உரியவாறு பிறப்பு, இறப்புப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 110) இல. 27 அல்லது 28 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி தனது பிறப்புச் சான்றிதழிலுள்ள பெயர்/பெயர்களை திருத்திக்கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iv) இலங்கையின் பிரசையாக பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ் அல்லது பரம்பரையாக உரித்தான பிரசாவுரிமை உள்ளது என அரசாங்கம் ஏற்றுக்கொண்டதற்கான கடிதம் (ஏற்றவாறு).

(v) இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்புடையதாக பெற்றுக் கொண்டுள்ள (கல்வி, தொழில்சார்) தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.

(vi) பயிற்சி பெற்றுள்ள மோட்டார் கராஜ்ஜிலிருந்து பெற்றுக் கொண்ட பிரயோகப் பயிற்சிக்கு ஏற்புடைய சான்றிதழ்.

(vii) சகல மோட்டார் வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

(viii) விண்ணப்பம் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான சகல ஆவணங்களையும் தயார்நிலையில் வைத்துக்கொள்ளுமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்படுகிறது. கேட்கும் பட்சத்தில், தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்கு தவறும் அல்லது அவற்றைச் சமர்ப்பிப்பதற்கு தாமதமாகும் பரீட்சார்த்தி இருப்பின், அவர் இப்பதவிக்கு நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவராவார்.

*15. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.-* இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளின்படி பரீட்சார்த்தி எவரும் அதற்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது அதன் பின்பு அல்லது எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்பட முடியும். பரீட்சார்த்தி வேண்டுமென்றே பிழையான தகவல்கள் வழங்கியிருப்பது அல்லது ஏதேனும் முக்கிய தகவலை வேண்டுமென்றே மறைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகுதியற்றவர் என அவரது சேவைக்காலத்தின் எந்நேரத்திலும் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரை உடனடியாக பதவியிலிருந்து நீக்குவதற்கு காரணமாக அமையும். இவ்வறிவித்தலின் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை உரியவாறு பூர்த்திசெய்யாத விண்ணப்பகாரர்களின் பரீட்சார்த்தி நிலை இரத்துச்செய்யப்படும்.

*16.* இவ்வறிவித்தலில் விவரிக்கப்படாத ஏதேனும் உரிய விடயம் இருப்பின், அது மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் பணிப்புரையின்பேரில் தீர்மானிக்கப்படும்.

பி. டி. எல். தர்மபிரிய,
மோட்டார் வாகனப் போக்குவரத்து
ஆணையாளர் நாயகம்.

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 5.
*2011.05.06.*

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**போக்குவரத்து அமைச்சு**

*மோட்டார் போக்குவரத்து திணைக்களம்*

**இலங்கை தொழினுட்பவியல் சேவையின் II ஆம் வகுப்பின் 'ஆ' வகுதி மோட்டார் வாகனப் பரீட்சகர்களை மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2011**

**Open Competitive Examination for Recruitment of Motor Vehicle Examiner to Class II Segment B of the Sri Lanka Technological Service for the Department of Motor Traffic - 2011**

☐

(அலுவலகப் பாவனையின் பொருட்டு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் : ☐
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1. தனிப்பட்ட தகவல்கள்-

1.1 முதலெழுத்துக்களை இறுதியில் இட்டு, முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
உ-ம். SILVA, A. B.

1.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 நிரந்தர முகவரி (அனுமதி அட்டை அனுப்பவேண்டிய) (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.5 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.6 பால் (ஆண்-0, பெண்-1) ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1.7 விவாகமானவரா/விவாகமாகாதவரா ? (விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் - 2) ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

1.9 பிறந்த திகதி :

| ஆண்டு | மாதம் | திகதி |
|---|---|---|
| ☐☐☐☐ | ☐☐ | ☐☐ |

1.10 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது-

| வருடங்கள் | மாதங்கள் | நாட்கள் |
|---|---|---|
| ☐☐ | ☐☐ | ☐☐ |

1.11 நீங்கள் இலங்கைப் பிரசையா என்பது பற்றி (பொருத்தமற்ற சொல்லை வெட்டிவிடவும்.)-

(அ) ஆம்/இல்லை
(ஆ) பரம்பரையாக/பதிவு மூலம்

2. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.)/தே. க. பொ. த :
சித்தியடைந்த வருடம் :----, பரீட்சை சுட்டிலக்கம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற சித்தி |
|---|---|
| | |

(ii) க. பொ. த. (உ. த.)
சித்தியடைந்த வருடம் :----, பரீட்சை சுட்டிலக்கம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | பெற்ற சித்தி |
|---|---|
| | |

(iii) பல்கலைக்கழக பட்டம் அல்லது பிற உயர் கல்வித் தகைமை களைப் பெற்றிருப்பின் அவை பற்றிய விபரங்கள் :-

| பட்டத்தின் பெயர் | கற்ற பாடங்கள் | சித்தியடைந்த வருடம் | பல்கலைக் கழகம் |
|---|---|---|---|
| | | | |

3. தொழில்சார் தகைமைகள் :

(i)

| பாடநெறியின் பெயர் | நிறுவனம் | பாடநெறி காலம் வருடங்கள் | சித்தியடைந்த வருடம் |
|---|---|---|---|
| | | | |

(ii) (அ) பயிற்சிபெற்ற மோட்டார் கராஜின் பெயரும் முகவரியும் :----.
(ஆ) குறித்த கராஜின் பதிவு இலக்கம் :----.
(இ) பயிற்சிபெற்ற காலம் :-
............. இருந்து ............. வரை
............................ வருடங்கள்

(iii) (அ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் இலக்கம் :----.
(ஆ) வழங்கப்பட்ட திகதி :----.

4. அரசாங்க திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில் சேவை யாற்றுபவர் எனின்,-
திணைக்களத்தின் பெயர்/கூட்டுத்தாபனத்தின் பெயர் :----.
தற்போதைய பதவி :----.
அதற்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
முகவரி :----.

5. ஏதேனும் நீதிமன்றமொன்றில் ஏதாவது குற்றம் தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ?
ஆம்/இல்லை :----.
'ஆம்' எனின் விபரமாக குறிப்பிடவும்.

6. பரீட்சைக் கட்டணம் :

பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட்ட ரூபா 500 தொகைக்கு மாவட்டச் செயலகம்/பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட ............................ இலக்கமுடைய ................................. ஆந் திகதியுடைய பற்றுச்சீட்டு பின்புறத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

7. விண்ணப்பகாரரது வெளிப்படுத்துகை.- இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் வெளிப்படுத்துகிறேன். இதிலுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நான் தெரிவுசெய்யப்படுமுன் தெரிய வந்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு உட்படும் எனவும், நான் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அதுபற்றி கண்டு பிடிக்கப்பட்டால் எனது நியமனம் உடனடியாக செல்லுபடியற்றதாகும் எனவும் நான் நன்கு அறிந்திருக்கிறேன். மேலும், பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகளுக்கேற்ப அமைந்தொழுகுவேன்.

----,
விண்ணப்பக்காரரது கையொப்பம்.

திகதி :----.

(விண்ணப்பக்காரர் அரசாங்க திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றில்/மாகாண சபையில் சேவையாற்றுபவராயின் திணைக்கள அல்லது கூட்டுத்தாபன தலைவர் ஊடாக அல்லது பிரதம செயலாளர் ஊடாக தமது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

**திணைக்கள அல்லது கூட்டுத்தாபன தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி .................................. இத்திணைக்களத்தில்/உள்ளூராட்சி மன்றத்தில்/மாகாண சபையில் சேவையாற்றுகிறார் எனவும், அவரது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானவை எனவும், உரிய வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டவாறு இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமை கொண்டிருக்கிறார் எனவும், அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை).

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

5-567

---

**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**

கத்தோலிக்க மறைப் பாடசாலை

**இறுதிச் சான்றிதழ் பரீட்சை – 2010**

**சட்ட விதிமுறைகள்** :

1. கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இதற்கென அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும்.

2. **பரீட்சை நிலையம்**.- நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் விண்ணப்பதாரரின் எண்ணிக்கைக்கேற்ப பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும். இருப்பினும் குறிப்பிட்ட ஒரு பரீட்சை நிலையத்தில் போதியளவு விண்ணப்பதாரர்கள் இல்லாவிடின் அப்பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அதற்குரிய விண்ணப்பதாரர்கள் அதற்கு அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்தில் மேற்படி பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்கள் மற்றும் நகரங்கள் அடங்கிய பட்டியல் இணைப்பு *I* இல் தரப்பட்டுள்ளது.

3. **ஊடக மொழி மூலம்**.- இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் மாத்திரம் நடைபெறும்.

4. **தகுதி**.- இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் கீழ்வருவனவற்றில் ஏதேனும் ஒரு தகைமையைப் பெற்றிருக்க வேண்டும் :-

4.1 மறைப் பாடசாலையொன்றில் பத்தாம் தரத்தில் சித்திபெற்று மறைப் பாடசாலையின் இறுதி நற்சான்றுப் பத்திர வகுப்பில் ஒரு வருடம் கல்வி பயின்றிருத்தல் ; அல்லது

4.2 தேசிய பொதுக்கல்வி தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் அல்லது கல்வி பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்திபெற்றிருத்தல் ; அல்லது சிரேட்ட பாடசாலை சான்றுப்பத்திர பரீட்சையில் கத்தோலிக்க மறை (கிறிஸ்தவ மறை றோ. க.) பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

4.3 அந்தந்த மறை மாவட்டத்தில் நடைபெறும் வருடாந்த மறைக்கல்வி பரீட்சையில் பதினோராந்தர வகுப்பில் சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு :** (I) இப்பரீட்சையில் தோற்றும் விண்ணப்ப தாரர்கள் மேலே பந்தி 4 இல் கேட்கப் பட்டுள்ளதற்கேற்ப தகுதி பெற்றுள்ளார் என்பதை மறைக்கல்வி பாடசாலைப் பொறுப்பாசிரியர் அல்லது பங்குக் குருவானவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(II) விண்ணப்பதாரர் மறைப் பாடசாலை விண்ணப்பதாரராக மட்டுமே இப்பரீட் சைக்குத் தோற்ற முடியும்.

**5. விண்ணப்பிக்கும் முறை :**

5.1 கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்காக பரீட்சைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து மறைப் பாடசாலைகளுக்கும் தேவையான விண்ணப்பப்படிவங்கள், அறிவுறுத்தல் பத்திரங்கள் உரிய காலத்தில் வழங்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்காவிட்டால் மறைப் பாடசாலையின் பெயர், முகவரி, விண்ணப்பதாரரின் எண்ணிக்கை ஆகிய விபரங்களை உள்ளடக்கிய கடிதம் மூலம் இவ்வறிவித்தலின் 5.6 இல் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு 2011.06.10 ஆந் திகதிக்கு முன் அறிவித்து விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5.2 விண்ணப்பதாரர் தனிப்பட்ட விண்ணப்பதாரராக பரீட் சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார். ஆயினும், அறிவுறுத்தல் 4 இல் கேட்கப்பட்டுள்ள தகுதியிருப்பின் தமது வதிவிடத்துக்கு அண்மையிலுள்ள மறைப் பாடசாலையின் ஊடாக பரீட்சைக் கட்டணமாக ரூபா 150 செலுத்தி பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கலாம். இதற்கான அறிவுறுத்தல்கள் மறைப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட் டுள்ளன.

5.3 மறைப் பாடசாலைப் பொறுப்பாசிரியரினால் முன்வைக்கப் படும் இவ்விண்ணப்பங்களின் இரண்டு பிரதிகள் தயாரிக்கப்பட்டு முதல் பிரதி பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அடுத்த பிரதி மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் வைத்திருத்தல் வேண்டும். இவ்விண்ணப்பப்படிவம் இரண்டிலும் மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.

5.4 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2011.06.27 ஆந் திகதி ஆகும்.

5.5 விண்ணப்பங்கள் தெளிவாகவும் பிழையின்றியும் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு நாம் குறிப்பிட்ட கடைசித் திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

5.6 மறைப் பாடசாலையின் முகவரி சரியாகக் குறிப்பிடப் பட்டிருக்க வேண்டும். முகவரி மாற்றப்பட்டிருப்பின் அதை எமக்கு அறிவிக்க வேண்டும். தொலைபேசி வசதியிருப்பின் அதன் இலக்கத்தையும் குறிப்பிடுக. நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பதிவுத்தபாலில் கீழே குறிப்பிடப் பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கத்தோலிக்க மறைப் பாடசாலை இறுதிப் பரீட்சை -2010'' என்பதையும் விண்ணப்பிக்கும் நகரத்தையும் குறிப்பிட வேண்டும். விண்ணப்பத்துடன் வேறெந்த சான்றிதழையும் இணைக்கத் தேவையில்லை.

5.7 விண்ணப்பதாரியின் சான்றிதழ் பற்றிய தகுதியை மறைப் பாடசாலை பொறுப்பாசிரியர் அல்லது பங்குத் தந்தை அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

**6. பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்கான கட்டணம் 150 ரூபாவாகும். இருப்பினும், முதன்முதலில் தோற்றும் விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்கான கட்டணத்தைச் செலுத்தத் தேவையில்லை.

6.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தல்.- விண்ணப்பதாரர் அனைவரினதும் பரீட்சைக் கட்டணத்தை பொறுப்பாசிரியர் ஒன்றுசேர்த்து இலங்கையில் ஏதாவதொரு தபாற்கந்தோரில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு, அப்பற்றுச்சீட்டை விண்ணப்பப்பத்திரத்தின் பின்னால் ஒட்டி அனுப்ப வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியொன்றை நீங்களும் வைத்திருப்பது நன்று. (முத்திரை, காசுக்கட்டளை போன்றவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

6.2 பரீட்சைக் கட்டணம் மீளப்பெறல்.- எக்காரணம் கொண்டும் இப்பரீட்சைக்காக செலுத்தப்படும் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றப்படவோ மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

**7. அனுமதி அட்டை.**- பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால், விண்ணப்பித்த மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரூடாக அனுமதி அட்டை அனுப்பப்படும்.

7.1 இப்பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு ஆளடையாளப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் தமது அனுமதி அட்டையில் தமது கையொப்பத்தை சான்றுப் படுத்தி பரீட்சைக்குத் தோற்றும் முதல் தடவையிலேயே பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தமது அனுமதி அட்டையைக் கொடுக்கா விட்டால் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் தமக்கு அளிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தைவிட்டு வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் அவரது பரீட்சார்த்தித் தகவு இரத்துச்செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள கையொப்பம் மறைப்பாடசாலை யின் பொறுப்பாசிரியரினால் அல்லது பங்குத் தந்தையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு 7 நாட்களுக்கு முன் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அந்த மறைப்பாடசாலை பொறுப் பாசிரியரினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கீழ்க்குறிப்பிட்ட விபரங்களை அறிவிக்க வேண்டும் :-

(1) பரீட்சையின் பெயர் ;
(2) மறைப் பாடசாலையின் பெயர் ;
(3) முழுப்பெயரும் முகவரியும் ;
(4) விண்ணப்பித்த பரீட்சை நிலையம் ;
(5) விண்ணப்பப்பத்திரம் தபாலிலிடப்பட்ட தபாற்கந்தோர் ;
(6) விண்ணப்பம் பதிவுசெய்யப்பட்ட பதிவு எண்ணும் திகதியும் ;
(7) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டிருப்பின் அந்தப் பற்றுச்சீட்டு இலக்கம், திகதி, தபாற்கந்தோர்.

8. **அடையாள அட்டை**.- ஒவ்வொரு வினாத்தாளுக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மண்டப மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் பரீட்சார்த்திகள் தம்மை அடையாளப் படுத்தும் ஆவணத்தைச் சமர்ப்பிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். அதற்காக பின்வருவனவற்றில் ஒன்றைப் பயன்படுத்தலாம் :-

8.1 தேசிய அடையாள அட்டை ;
8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

9. **சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும், பெறுபேற்றை வெளியிடலும்**.- இத்தேர்வுக்கான வினாத்தாள்களின் எண்ணிக்கை நான்கு ஆகும். பரீட்சார்த்தி நான்கு வினாத்தாள்களிலும் ஒரே முறையில் சித்திபெற வேண்டும்.

9.1 இத்தேர்விலே நூன சித்தி வழங்கப்படமாட்டாது ;
9.2 ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

சித்திபெறும் தரம், குறியீடு கீழே உள்ளவாறு அமையும் :-

| ஆயிடை | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0-34 | சித்தியின்மை | F |
| 35-54 | சித்தி | S |
| 55-69 | திறமைச் சித்தி | C |
| 70-100 | விசேட சித்தி | D |

9.3 பரீட்சார்த்திகளின் பெறுபேற்று அட்டவணை அந்தந்த மறைப் பாடசாலைப் பொறுப்பாளருக்கு தபால் மூலம் அனுப்பப்படும்.

10. **நற்சான்றிதழ் பத்திரம்**.- இத்தேர்வில் சித்திபெற்ற அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தினால் சான்றிதழ் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

11. **விடைத்தாள் மீள் பரிசீலனை**.- மறைப் பாடசாலை பொறுப்பாசிரியரின் வேண்டுகோளின்படி விடைத்தாள்கள் பரிசீலனை செய்யப்படும். இத்திணைக்களத்தினால் வெளியிடப்படும் படிவத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு 30 நாட்களுக்குள் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம். இதற்காக அறவிடப்படும் கட்டணத் தொகை பற்றி அவ்வப்போது மாற்றம் செய்ய இடமுண்டு. அதுபற்றி விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படும். ஏற்கனவே வெளியிடப்பட்ட பெறுபேற்றில் ஏதும் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இப்பணம் மீளத்தரப்படும். எக்காரணத்தைக் கொண்டும் விண்ணப்பதாரருக்கோ அவரது பிரதிநிதிக்கோ விடைத்தாள்களைப் பரிசீலிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

12. இச்சட்டதிட்டங்களுக்கும் பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப செயற்படுவதற்கு அனைத்து விண்ணப்ப தாரரும் கட்டுப்பட்டு இருப்பதோடு இந்த ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்காதோர் பற்றிய விடயத்தில் பரீட்சை ஆணையாளரினால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது ஆகும்.

அநுர எதிரிசிங்க,
பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2011.05.

**கத்தோலிக்க மறை**

(2007 இலிருந்து நடாத்தப்படும் பரீட்சைக்கான)
பாடத்திட்டம்

இத்தேர்வு ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 03 மணித்தியாலங்களைக் கொண்ட 04 வினாத்தாள்களை உள்ளடக்கியது.

***வினாத்தாள் I***

**கத்தோலிக்க விசுவாசம்**

(அ) இவ்வினாத்தாள் திருத்தூதரது விசுவாச அறிக்கையின் ஆரம்ப கற்பித்தலை அடித்தளமாகக் கொண்டுள்ளது :

* படைத்தவர்
  - உலக ஆரம்பம்
  - படைப்பின் அழகு
  - படைப்பைப் பாதுகாத்தல் (தொ. நூ. 1, 2, 3)

* மீட்பர்
  - இயேசுக்கிறிஸ்து (யோவான் 1:1-14)
  - இறையரசு பற்றிய படிப்பினை (மத்தேயு 5, 6, 7)
  - உவமைகள் (மத்தேயு 13:1-52)
  - புதுமைகள் (யோவான் 11:38-45, லூக்கா 8:26-39, மாற்கு 2:1-12, 4:35-41)

* தூய ஆவியானவர்
  - செயற்பாடுகள் (யோவான் 7:37-39, 14:15-31, 16:5-15, 1கொருந்தியர் 12:4-11)

* கத்தோலிக்க திருச்சபை
  - ஏகம், பரிசுத்தம், கத்தோலிக்கம், அப்போஸ்தலிக்கம்
  - திருச்சபை கிறிஸ்துவின் சரீரமாக
    உரோமையர் 12:4-21
    1கொரிந்தியர் 12:12-31

- திருச்சபையின் ஆட்சித்திட்டம்
- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரம்கொண்ட பணி
- துறவற பணி
- பொதுநிலையினர் பணி

* மனித வாழ்வின் மாற்றம்
- மனிதனின் இறுதி நிகழ்வு
- புதிய வானமும் புதிய பூமியும் (திருவெளிப்பாடு 21:1-4)

### வினாத்தாள் II

### கத்தோலிக்க வாழ்விற்கான வழி

(ஆ) கத்தோலிக்க வாழ்விற்கு வலிமை தரும் திருவழிபாடு
* திருப்பலியும் திருப்பலிச் சடங்கும்
* பாஸ்கா மறைபொருள்
* இறையருள்
* திருவருட்சாதனங்கள் (பொதுவான பண்பு)

* தொடக்க திருவருட் சாதனங்கள்
* திருமுழுக்கு
* உறுதிப்பூசுதல்
* திவ்விய நற்கருணை

* சுகத்தை வழங்கும் திருவருட்சாதனங்கள்
* ஒப்புரவு
* நோயிற்பூசுதல்

* பணிக்காக ஏற்படுத்தப்பட்ட திருவருட் சாதனங்கள்
* குருத்துவம்
* மெய்விவாகம்

### வினாத்தாள் - III

### கத்தோலிக்க நல்லொழுக்க வாழ்வு

(இ) கத்தோலிக்க நல்லொழுக்கம்

* பத்துக் கட்டளைகளும் அன்பின் கட்டளைகளும் இரு பக்கங்கள்
* பத்துக் கட்டளைகளை நிறைவாக்கிய இயேசுக்கிறிஸ்து (மத்தேயு 5:21-47)
* சமவெளிப் பொழிவு (மலைப்பொழிவு) (லூக்கா 6:17-49)
* அறிவு, சுதந்திரமான விருப்பு, உணர்வுகள்
* இறை உறவின் பண்புகள்
* மனசாட்சி
* இறைவனை அன்பு செய்தல் (1-3 கட்டளைகள்)
* அயலவரை அன்பு செய்தல் (4-10 கட்டளைகள்)
* பத்துக் கட்டளைகளில் தோன்ற வேண்டிய நற்பழக்கங்கள்
* கத்தோலிக்க தனித்துவ அடையாளம்

### வினாத்தாள் IV

### செப வாழ்வு

(ஈ) இறையுறவை வளர்க்கும் செபம்

* பழைய ஏற்பாட்டில் செபம்
- ஆபிரகாம்
- மோசே

* புதிய ஏற்பாட்டில் செபம்
- கிறிஸ்து செபித்த விசேட சந்தர்ப்பங்கள்
- சேபம் தொடர்பான விசேட படிப்பினைகள் (லூக்கா 11:1-13)

* திருச்சபை வாழ்வில் செபம்
- புகழ்தல்
- நன்றி கூறல்
- வேண்டுதல்
- பரிந்துரை செபங்கள்
- தியானம் மூலம் செபித்தல்

* கிறிஸ்து கற்பித்த செபத்தில் (பரலோக மந்திரம்) வேண்டுதல்கள் ஏழு
- உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக
- உம்முடைய அரசு வருக
- உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூவுலகிலும் செய்யப்படுவதாக
- எங்கள் அனுதின உணவை எங்களுக்கு அன்றாடம் அளித்தருளும்
- எங்களுக்குத் தீமை செய்கின்றவர்களை நாங்கள் பொறுப்பது போல் எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்
- சோதனையில் எங்களை விழ விடாதேயும்
- தீமையில் இருந்து எங்களை இரட்சித்தருளும்

* பல்வித பக்தி முயற்சிகள்
- செபமாலை
- நவநாட்கள்
- திருமணித்தியாலம்

### பயன்படுத்தக்கூடிய நூல்கள்

- புதிய கத்தோலிக்க திருமறை
- பெரிய குறிப்படம்
- திருவிவிலியம் (குறிப்பிட்ட பகுதிகள்)
- இரண்டாம் வத்திக்கான் சங்க,
  * திருவழிபாடு
  * இன்றைய உலகில் திருச்சபை
  * கிறிஸ்துவின் திருச்சபை
  * பொதுநிலையினரின் திருப்பணி

### இணைப்பு I

மாவட்டங்களின் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள நகரங்களும் நகர எண்களும்

### மாவட்டம் 1 - கொழும்பு

| நகரம் | நகர எண் |
|---|---|
| பொரளை | 101 |
| களுஅக்கலை | 102 |
| பன்னிப்பிட்டி | 103 |
| மொறட்டுவ | 104 |

**மாவட்டம் 2 - கம்பஹா**

| நகரம் | நகர எண் |
|---|---|
| நீர்கொழும்பு | 205 |
| கந்தானை | 206 |
| கம்பஹா | 207 |
| நாகம | 208 |

**மாவட்டம் 3 - களுத்துறை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| களுத்துறை | 309 |

**மாவட்டம் 4 - காலி**

| நகரம் | நகர எண் |
|---|---|
| காலி | 410 |

**மாவட்டம் 5 - மாத்தறை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தறை | 511 |

**மாவட்டம் 6 - அம்பாந்தோட்டை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாந்தோட்டை | 612 |

**மாவட்டம் 7 - இரத்தினபுரி**

| நகரம் | நகர எண் |
|---|---|
| இரத்தினபுரி | 713 |

**மாவட்டம் 8 - கேகாலை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கேகாலை | 814 |

**மாவட்டம் 9 - புத்தளம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| புத்தளம் | 915 |
| சிலாபம் | 916 |
| வென்னப்புவ | 917 |

**மாவட்டம் 10 - குருனாகல்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| குருனாகல் | 1018 |
| குளியாப்பிட்டி | 1019 |
| நிக்கவரட்டி | 1020 |

**மாவட்டம் 11 - கண்டி**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கண்டி | 1121 |

**மாவட்டம் 12 - மாத்தளை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மாத்தளை | 1222 |

**மாவட்டம் 13 - நுவரெலியா**

| நகரம் | நகர எண் |
|---|---|
| தலவாக்கலை | 1323 |

**மாவட்டம் 14 - பதுளை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| பதுளை | 1424 |

**மாவட்டம் 15 - மொணறாகலை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மொணறாகலை | 1525 |

**மாவட்டம் 16 - அனுராதபுரம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அனுராதபுரம் | 1626 |

**மாவட்டம் 17 - பொலன்னறுவை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| ஹிங்குராக்கொடை | 1727 |

**மாவட்டம் 18 - திருகோணமலை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| திருகோணமலை | 1828 |

**மாவட்டம் 19 - மட்டக்களப்பு**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மட்டக்களப்பு | 1929 |

**மாவட்டம் 20 - அம்பாறை**

| நகரம் | நகர எண் |
|---|---|
| அம்பாறை | 2030 |
| கல்முனை | 2031 |

**மாவட்டம் 21 - யாழ்ப்பாணம்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| யாழ்ப்பாணம் | 2132 |
| மானிப்பாய் | 2133 |
| பருத்தித்துறை | 2134 |
| நெடுந்தீவு | 2135 |

**மாவட்டம் 22 - முல்லைத்தீவு**

| நகரம் | நகர எண் |
|---|---|
| கிளிநொச்சி | 2236 |
| முல்லைத்தீவு | 2237 |
| முழுங்காவில் | 2238 |

**மாவட்டம் 23 - மன்னார்**

| நகரம் | நகர எண் |
|---|---|
| மன்னார் | 2339 |
| முருங்கன் | 2340 |
| ஆண்டாங்குளம் | 2341 |
| பெரிய பண்டிவிரிச்சான் | 2342 |

**மாவட்டம் 24 - வவுனியா**

| நகரம் | நகர எண் |
|---|---|
| வவுனியா | 2443 |

5-725

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.